[21st April 1959

THE HON. SRI P. KAKKAN : இரண்டாக பிரிப்பது அவசிய மில்லை, இரண்டாக பிரித்தால் செலவு இன்னும் கூடுதலாகும்.

SRI N. MARUDACHALAM : காலாகாலத்தில் கொடுக்கப்படாத இடத்தில் உடனடியாக இந்த ஸ்காலர்ஷிப் பணத்தைக் கொடுப்ப தற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது காலாகாலத்தில் கொடுப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பிரின்ஸ்பாலிடமிருந்து ரிப்போர்ட் வருவதற்கு கால தாமதம் ஆகிறது. மேலும், இதற்காக கொடுக்கப்படும் விண்ணப்பங்களும் சரியான விதத்தில் பூர்த்தி செய்து கொடுக்கப் படாமல் இருப்பதினாலும் இந்த காலதாமதம் ஏற்படுகிறது.

Minor Irrigation Schemes in North Arcot District

* 42 *Q.*—SRI. V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. P. SARATHI) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

1958-ம் ஆண்டு வடாற்காடு ஜில்லாவில் நிறைவேற்றி வைக்கப்பட்ட சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கான செலவு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is presumed that the hon. Member refers to the schemes under the Special Minor Irrigation Programme. The expenditure incurred on such works during 1958 is Rs. 4,85,696 of which Rs. 48,482 was spent on the works actually completed during the year.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை எந்தெந்த வேலைகளுக்காக என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் 361 வேலைகள் முடிவடைந்து இருக்கின்றன, இதற்கு சுமார் 2 லட்சம் 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேறு 463 வேலைகளுக்கு சுமார் 2 லட்சம் 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know what are the schemes included in the Special Minor Irrigation Programme and when they are likely to be completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have particulars with me, but the Budget Memorandum would have given particulars about Minor Irrigation and Special Minor Irrigation programmes to be carried out this year.

Starting of a Wool-Weaving Industry at Attuvambady

1-30 p. m. * 43 *Q.*—SRI K. RAMACHANDRAN (on behalf of SRI S. M. ANNAMALAI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

போளூர் தாலூகா, ஆத்துவாம்பாடியில் கம்பளி நெசவுத் தொழில் ஆரம்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?